4. அறிவிப்பு.

பேரவைத் துறை, பேரவைச் செயலகம் என்கிறபெயரில் முழு ஆளுமை உரிமை பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, சட்டப்பேரவைத் துறை அரசின் தலையீடின்றி எனது முழு ஆளுகையின் கீழ், இதற்கென அரசியலைமைப்புச் சட்டத்தின கீழ் இயற்றப்பட்ட பேரவைச் செயலக தனிப் பணிவிதிகளின்படி இயங்கினாலும் அது அரசுத்துறை என்று அழைக்கப்படுவதினால் சில தவறான கருத்துக்கள் நிலவுவதைப் போக்குவதற்காக நானும், அரசும், ஆளுநரும் கலந்து ஆலோசித்து தற்போது இத்துறை செயலகத்துறை என்று இருப்பதை 'பேரவைச் செயலகமாக' எனது முழு ஆளுகையின் கீழ் தனித்து இயங்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 187-வது பிரிவின் கீழ் என்னைக் கலந்தாலோசித்து ஆளுநர் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

16-2-1984 முதல் இத்துறை, பேரவைச் செயலகம் (Legislative Assembly Secretariate) என்னும் பெயரில் இயங்கும். செயலாளர், அவைக்கு செயலாளர் என்றும், செயலகத்திற்கு ஆணையர்-செயலாளர் என்றும் அழைக்கப்படுவார். ஆணையர்-செயலாளர் என அழைக்கப்படுவர் மற்ற அரசுத்துறை ஆணையர்-செயலாளர்களுக்கு சமமானவர் என்பதற்காகவே என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவைச் செயலாளர் மீது நீதிமன்றத்தில் writ quo warranto) ரிட் கோவாரண்டோ ஒன்று எழுதப்பட்டதாக இன்று காலை நாளிதழில் வெளிவந்த செய்தியினைப் பார்த்தேன் இந்த அவையின் அலுவலகம் இதுவரை எவ்வாறு இயங்கி வந்தது என்பதைப் பற்றியும் இனிமேல் இவ்வலுவலகம் எந்தப் பெயரின் கீழ் இயங்கும் என்பதைப் பற்றியும் பேரவைக்கு அறிவித்தேன். எந்த அதிகாரத்தின் கீழ் இப்பேரவைக்கு செயலாளராக ஒருவர் இயங்குகிறார் என்பதை இப்பேரவை மட்டுமே விசாரிக்கத் தகுந்தது. இது பற்றி ஆராய்வதற்கோ இது பற்றி வேறு மன்றங்களில் எழுப்புவதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது. அவ்வாறு செய்தால் இப்பேரவையை அவமதித்த குற்றத்திற்கு ஆளாவார்கள்.

இப்பேரவை செயலாளர் அரசியலமைப்புச் சட்டத்தின் 187-வது விதியின் கீழ் ஆளுநரால் பேரவைத் தலைவரை கலந்தாலோசித்து இயற்றப்பெற்ற இச்செயலகத்தின் பணி விதிகளின் கீழ் Tamil Nadu Legislative Assembly Secretariat Service Rules அமர்த்தப்படுகிறார். இக்காரணங்களாலும் இப்பேரவையின்முன் மரபுகளையொட்டியும் நீதிமன்றத்திலிருந்து ஏதேனும் தாக்கீது

வருமானால் செயலாளர் இந்த அவையின் அலுவலர் என்ற முறையில் அதைப் பெறாது மறுத்து அனுப்பிவிட வேண்டுமென்று அவருக்கு கட்டளையிடுகிறேன்.

இதுபற்றிய சட்டத்தையும், விதிகளையும் உயர்நீதி மன்றத்தில் இயங்கும் தனது சட்ட அலுவலர்கள் (Law Officers) மூலமாக அரசு, உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. K. SOURIRAJAN : Mr. Speaker, Sir, I am on a Point of Order. May I invite your kind attention to Clause (2) of Art, 187, where it states that the 'Legislature of a State may by law regulate the recruitment. and the conditions of service of persons' என்று இருக்கிறது.

அதுவரை ஆர்ட்டிக்கிள் 187(2)லே, கவர்னர் அவர்கள் சபாநாயகரை கலந்துக்கொண்டு எப்பொழுது வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற உரிமையை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நீங்கள் இந்த உரிமையைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள்.

இந்த சட்டமன்றத்திலே Are you going to come with a Bill? Are you going to come with some sort of law before the Legislature? It is the Legislature which is supreme; it is not the Speaker and Governor alone who are Supreme. ஆர்ட்டிகள் 187 (2)—இல் 'a Legislature of a State may by law regulate the recruitment, and the conditions of service of persons' என்று சொல்லியிருக்கிறார்கள். ஸ்பீக்கருக்கு உரிமை இருக்கிறது. இதன்படி Are you going to introduce a Bill? This is more important. You cannot take decisions SUO MOTU. The House is supreme.

(முற்பகல் 11-30)

MR. SPEAKER : I can take 'SUO MOTU' decision.

DR. K. SOURIRAJAN : But we have to endorse it.

MR. SPEAKER : No.

DR. K. SOURIRAJAN : It must come before the Legislature

MR. SPEAKER : That is why I have announced in the Assembly. This is the procedure which is approved and continuously followed by our Parliament and Parliaments in all democratic countries So this is not a new or novel thing.

Dr. K. SOURIRAJAN : They are acting on behalf of the Legislature. I may oppose a proposal. It must come in the form of a Bill and made law. It must be put to vote.

MR. SPEAKER : No. That is not absolutely necessary. As far as my Secretariat is concerned, it is not necsssary.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைச் செயலாளர், கமிஸனர் அன்ட் செகரட்டரியாக்கப்பட்டு இருக்கிறார் என்ற செய்தி பத்திரிகைகளிலே வந்தது. அதுபற்றி இந்த அவைக்குச் சொல்லப்படவில்லை. ஹைகோர்ட்டிலே கேஸ் வந்தபிறகுதான் இங்கே தெரிவிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றுதான் ஆர்டர் போடப் பட்டது. உடனே அவர்கள் கோர்ட்டிற்குப் போயிருக்கிறார்கள், இன்றைக்கு நான் அறிவிக்க வேண்டிய நாள். நான் அறிவித்து இருக்கிறேன்.

3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி

*திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். நேற்றைக்கு முன்தினம் இந்த மாமன்றத்தில் இடையிட்டுப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவரது கருத்தையொட்டி கழகத்தின் சார்பில் ஆளுநர் உரையின்மீது சில கருத்துகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. முத்துக்கிருஷ்ணன் எதிர்க்கட்சிகள் தேவையில்லாமல் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. என்றுகுறிப்பிட்டார். அவ்வாறு முதலமைச்சரோ அமைச்சர்களோ கருதாமல், நியாயமானகுறைகளைச் சொல்வதற்கு, ஆட்சியிலே இருக்கிறகுறைகளை சொல்லி அவைகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமை என்ற அந்த அடிப்படையில் என்னுடைய பேச்சை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலிலே திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவும் பிரிகிற பகுதிக்கு பெரம்பலூர் மாவட்டத் தலைநகராக இருக்கும் என்று அறிவித்ததற்கும் அந்த மக்களின் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் முதலமைச்சர் அவர்களுக்குத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS